020

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் பட்டமேல் டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

இறுதிப்பரீட்சை – 2022/2023

**SNP8443/SNP8333–** விசேட தேவைகள் சார் கல்வியில் அளவீடும் மதிப்பீடும்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- **10.12.2023** நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இன் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இன் எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்கவும்.

அடிப்படை கணிதச் செய்கைகளுக்காக விஞ்ஞான கணிதறி அல்லாத கணிப்பானை பயன்படுத்த முடியும்.

## பகுதி – I

1. "கணிப்பீடு" மற்றும் "மதிப்பீடு" எனும் எண்ணக்கருக்களை வேறுபடுத்துக.
2. உதாரணங்களைக் காட்டி மையநிலை அளவைகள் என்றால் என்ன என்பதை விளக்குக.
3. செவ்வன் நிகழ்தகவு வளையியின் ஐந்து (05) பண்புகளைப் பட்டியலிடுக.
4. **(i)** நியம அட்டவணை என்பதனால் யாது கருதப்படுகின்றது?
   **(ii)** கல்வி மதிப்பீட்டில் பயன்படுத்தப்படும் இரண்டு (02) நியம அட்டவணைகளை சுருக்கமாக விளக்குக.
5. ஒரு (01) உதாரணத்தை மேற்கோள் காட்டி, சமுகமான சோதனை என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விளக்குக.
6. **(i)** விபரக்கூற்று அட்டவணை என்றால் என்ன?
   **(ii)** சோதனை ஒன்றினை தயாரிக்கையில் விபரக்கூற்று அட்டவணையினை பயன்படுத்துவதன் நன்மைகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.
7. எழுச்சி விருத்தியை அளவீடு செய்வது ஏன் கடினமானது என்பதை சுருக்கமாக விளக்குக.
8. **(i)** நியமப் புள்ளி அல்லது "Z – புள்ளி" என்றால் என்ன?
   **(ii)** கூட்டலிடை மற்றும் நியமவிலகல் முறையே 48 மற்றும் 12 ஆகவுள்ள பரம்பலின் மூலப்புள்ளி 78 இற்குரிய Z - புள்ளிளைக் கணிக்குக.

**(05 x 08 = 40** புள்ளிகள்)

## பகுதி – II

9.

**i.** புறவயவகைச் சோதனை என்பதனால் யாது கருதப்படுகின்றது. **(02** புள்ளிகள்)

**ii.** ஒரு புறவயவகை சோதனையின் அனுகூலங்கள் மூன்றையும் (03) பிரதிகூலங்கள் மூன்றையும் (03) எழுதுக **(06** புள்ளிகள்)

**iii.** புறவயவகை சோதனைகளில் நான்கு (04) வகையான உருப்படிகளை பெயரிட்டு அவ் ஒவ்வொரு வகைக்கும் ஒரு (01) உதாரணம் வீதம் தருக. **(04** புள்ளிகள்)

iv. மேலே குறிப்பிட்ட உருப்படிகளில் ஒன்றை அமைப்பதற்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய காரணிகள் இரண்டினை (02) விளக்குக. **(04 புள்ளிகள்)**

v. "கட்டுரை வகை சோதனை விடைத்தாள்களை திருத்துவது அகவயத்தன்மையானது"
குறைந்தது இரண்டு (02) முக்கியமான காரணங்களையாவது காட்டி இக்கூற்றினை விளக்குக.
**(04 புள்ளிகள்)**

10.

i. பிள்ளையின் "உள- இயக்க விருத்தி" என்பதனால் யாது கருதப்படுகின்றது.
**(02 புள்ளிகள்)**

ii. உள இயக்க ஆட்சியின் சிம்ஸனின் (Simson's) வகைப்படுத்தலை விளக்குக.
**(07 புள்ளிகள்)**

iii. உள இயக்க செயற்பாடுகளில் கணிப்பிடப்படும் அம்சங்களை உதாரணங்களை மேற்கோள்காட்டி சுருக்கமாக விளக்குக. **(04 புள்ளிகள்)**

iv. மேலே உள்ள ஒவ்வொரு அம்சங்களையும் அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் கருவிகளின் பெயரைக் குறிப்பிடுக.
பொருத்தமான உதாரணம் ஒன்றைப் (01) பயன்படுத்தி அவற்றில் ஒன்றை விளக்குக.
**(04 புள்ளிகள்)**

v. தகுந்த உதாரணங்களை மேற்கோள்காட்டி வகுப்பறை கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் பிள்ளைகளின் பூரண விருத்திக்கு உள இயக்கத் திறன்களை கணிப்பிடுவதன் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.
**(03 புள்ளிகள்)**

11.

i. "பாடசாலை மட்டக் கணிப்பீடு" எனபதனால் யாது கருதப்படுகின்றது என்பதை சுருக்கமாக விளக்குக.
**(03 புள்ளிகள்)**

ii. இந்த கணிப்பீட்டு செயன்முறையின் பிரதான இயல்புகள் மூன்றைக் குறிப்பிடுக.
**(03 புள்ளிகள்)**

iii. நீங்கள் கற்பிக்க எதிர்பார்க்கும் பாடம் தொடர்பாக பாடசாலை மட்டக் கணிப்பீட்டினை எவ்வாறு நடத்துவீர்கள் என்பதை விளக்குக. **(05 புள்ளிகள்)**

iv. இக்கணிப்பீட்டு செயன்முறையினை நடைமுறைப்படுத்தும் போது ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மூன்றினை (03) ஆராய்க. **(09 புள்ளிகள்)**

12. பரீட்சையொன்றில் 40 மாணவர்கள் பெற்ற புள்ளிகள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 81 | 09 | 96 | 47 | 50 | 19 | 77 | 42 |
| 49 | 62 | 76 | 65 | 47 | 30 | 59 | 33 |
| 35 | 69 | 50 | 25 | 55 | 42 | 80 | 60 |
| 58 | 96 | 73 | 70 | 55 | 13 | 74 | 43 |
| 29 | 45 | 57 | 79 | 58 | 64 | 38 | 89 |

**i.** (40 – 51) என்பதனை வகுப்பாயிடைகளில் ஒன்றாகக் கொண்டு மேற்தரப்பட்ட புள்ளிகளின் மீடிறன் பரம்பல் அட்டவணையொன்றைத் தயாரிக்குக. (03 புள்ளிகள்)

**ii.** இந்த மீடிறன் பரம்பிலின் ஆகாரம் மற்றும் இடையம் என்பவற்றைக் கணிக்க. (05 புள்ளிகள்)

**iii.** மேலுள்ள புள்ளித் தொகுதியின் ஊடக இடை (40 – 51) என்ற வகுப்பாயிடையில் உள்ளதாகக் கொண்டு, கூட்டலிடையைக் கணிக்குக. (06 புள்ளிகள்)

**iv.** இப்புள்ளிப்பரம்பலின் நியம விலகலைக் கணிக்குக. (06 புள்ளிகள்)

13.

**i.** "இணைபு" மற்றம் "இணைபுக் குணகம்" எனும் பதங்களை விளக்குக.

**(04 புள்ளிகள்)**

**ii.** "எதிர் இணைபுக் குணகம்" என்பதனால் யாது கருதப்படுகின்றது. என்பதை உதாரணம் ஒன்றின் (01) மூலம் விளக்குக. **(02 புள்ளிகள்)**

**iii.** வருட இறுதிப்பரீட்சையொன்றில் கணிதம், நடனம் பாடங்களில் பெற்ற புள்ளிகள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| மாணவர்கள் / பாடம் | A | B | C | D | E | F | G | H | I | J |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கணிதம் | 78 | 73 | 85 | 75 | 88 | 59 | 58 | 78 | 59 | 80 |
| நடனம் | 61 | 68 | 50 | 65 | 70 | 63 | 70 | 57 | 55 | 61 |

(அ) கணிதம் மற்றும் நடனம் புள்ளிகளுக்கு இடையிலான வரிசைநிலை இணைபுக் குணகத்தைக் கணிக்க. (11 புள்ளிகள்)

(ஆ) இணைபுக் குணகத்திற்குப் பெற்ற பெறுமானம் தொடர்பாக கருத்துரைக்க.

**(03 புள்ளிகள்)**

14. பரீட்சையொன்றில் 2500 மாணவர்கள் பெற்ற புள்ளிகள் செவ்வன் நிகழ்தகவு வளையியிற்கமைய அமைந்துள்ளன. இப்பரம்பலின் கூட்டலிடையும், நியம விலகலும் முறையே 50 உம் 10 உம் ஆகும்.

**i.** 35 – 60 இற்கும் இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது?

**(05 புள்ளிகள்)**

**ii.** 40 புள்ளிகளுக்கு குறைவாகப் பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையைக் காண்க.

**(05 புள்ளிகள்)**

**iii.** அதிசிறந்த 5% மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்க எதிர்பார்க்கப்பட்டால் சான்றிதழை பெற்றுக் கொள்வதற்கு எடுக்கவேண்டிய அதிகுறைந்த புள்ளி யாது? **(05 புள்ளிகள்)**


**iv.** மாணவர்களில் 70% இனை பரீட்சையில் சித்தியடைய செய்வதாயின் அதற்குரிய சித்திப்புள்ளி யாது?

**(05 புள்ளிகள்)**

*-முழுப்பதிப்புரிமை பெற்றது -*

ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
The open university of Sri Lanka

සම්මත ප්‍රමිත වක්‍රය යට ක්ෂේත්‍රඵල - (0 සිට Z දක්වා)
நியம வளையி இன் பரப்பளவுகள் - 0 முதல் Z வரை
Areas Under the Standard Normal Curve – from 0 to z




| Z | 0.00 | 0.01 | 0.02 | 0.03 | 0.04 | 0.05 | 0.06 | 0.07 | 0.08 | 0.09 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0.0 | 0.0000 | 0.0040 | 0.0080 | 0.0120 | 0.0160 | 0.0199 | 0.0239 | 0.0279 | 0.0319 | 0.0359 |
| 0.1 | 0.0398 | 0.0438 | 0.0478 | 0.0517 | 0.0557 | 0.0596 | 0.0636 | 0.0675 | 0.0714 | 0.0753 |
| 0.2 | 0.0793 | 0.0832 | 0.0871 | 0.0910 | 0.0948 | 0.0987 | 0.1026 | 0.1064 | 0.1103 | 0.1141 |
| 0.3 | 0.1179 | 0.1217 | 0.1255 | 0.1293 | 0.1331 | 0.1368 | 0.1406 | 0.1443 | 0.1480 | 0.1517 |
| 0.4 | 0.1554 | 0.1591 | 0.1628 | 0.1664 | 0.1700 | 0.1736 | 0.1772 | 0.1808 | 0.1844 | 0.1879 |
| 0.5 | 0.1915 | 0.1950 | 0.1985 | 0.2019 | 0.2054 | 0.2088 | 0.2123 | 0.2157 | 0.2190 | 0.2224 |
| 0.6 | 0.2257 | 0.2291 | 0.2324 | 0.2357 | 0.2389 | 0.2422 | 0.2454 | 0.2486 | 0.2517 | 0.2549 |
| 0.7 | 0.2580 | 0.2611 | 0.2642 | 0.2673 | 0.2704 | 0.2734 | 0.2764 | 0.2794 | 0.2823 | 0.2852 |
| 0.8 | 0.2881 | 0.2910 | 0.2939 | 0.2967 | 0.2995 | 0.3023 | 0.3051 | 0.3078 | 0.3106 | 0.3133 |
| 0.9 | 0.3159 | 0.3186 | 0.3212 | 0.3238 | 0.3264 | 0.3289 | 0.3315 | 0.3340 | 0.3365 | 0.3389 |
| 1.0 | 0.3413 | 0.3438 | 0.3461 | 0.3485 | 0.3508 | 0.3531 | 0.3554 | 0.3577 | 0.3599 | 0.3621 |
| 1.1 | 0.3643 | 0.3665 | 0.3686 | 0.3708 | 0.3729 | 0.3749 | 0.3770 | 0.3790 | 0.3810 | 0.3830 |
| 1.2 | 0.3849 | 0.3869 | 0.3888 | 0.3907 | 0.3925 | 0.3944 | 0.3962 | 0.3980 | 0.3997 | 0.4015 |
| 1.3 | 0.4032 | 0.4049 | 0.4066 | 0.4082 | 0.4099 | 0.4115 | 0.4131 | 0.4147 | 0.4162 | 0.4177 |
| 1.4 | 0.4192 | 0.4207 | 0.4222 | 0.4236 | 0.4251 | 0.4265 | 0.4279 | 0.4292 | 0.4306 | 0.4319 |
| 1.5 | 0.4332 | 0.4345 | 0.4357 | 0.4370 | 0.4382 | 0.4394 | 0.4406 | 0.4418 | 0.4429 | 0.4441 |
| 1.6 | 0.4452 | 0.4463 | 0.4474 | 0.4484 | 0.4495 | 0.4505 | 0.4515 | 0.4525 | 0.4535 | 0.4545 |
| 1.7 | 0.4554 | 0.4564 | 0.4573 | 0.4582 | 0.4591 | 0.4599 | 0.4608 | 0.4616 | 0.4625 | 0.4633 |
| 1.8 | 0.4641 | 0.4649 | 0.4656 | 0.4664 | 0.4671 | 0.4678 | 0.4686 | 0.4693 | 0.4699 | 0.4706 |
| 1.9 | 0.4713 | 0.4719 | 0.4726 | 0.4732 | 0.4738 | 0.4744 | 0.4750 | 0.4756 | 0.4761 | 0.4767 |
| 2.0 | 0.4772 | 0.4778 | 0.4783 | 0.4788 | 0.4793 | 0.4798 | 0.4803 | 0.4808 | 0.4812 | 0.4817 |
| 2.1 | 0.4821 | 0.4826 | 0.4830 | 0.4834 | 0.4838 | 0.4842 | 0.4846 | 0.4850 | 0.4854 | 0.4857 |
| 2.2 | 0.4861 | 0.4864 | 0.4868 | 0.4871 | 0.4875 | 0.4878 | 0.4881 | 0.4884 | 0.4887 | 0.4890 |
| 2.3 | 0.4893 | 0.4896 | 0.4898 | 0.4901 | 0.4904 | 0.4906 | 0.4909 | 0.4911 | 0.4913 | 0.4916 |
| 2.4 | 0.4918 | 0.4920 | 0.4922 | 0.4925 | 0.4927 | 0.4929 | 0.4931 | 0.4932 | 0.4934 | 0.4936 |
| 2.5 | 0.4938 | 0.4940 | 0.4941 | 0.4943 | 0.4945 | 0.4946 | 0.4948 | 0.4949 | 0.4951 | 0.4952 |
| 2.6 | 0.4953 | 0.4955 | 0.4956 | 0.4957 | 0.4959 | 0.4960 | 0.4961 | 0.4962 | 0.4963 | 0.4964 |
| 2.7 | 0.4965 | 0.4966 | 0.4967 | 0.4968 | 0.4969 | 0.4970 | 0.4971 | 0.4972 | 0.4973 | 0.4974 |
| 2.8 | 0.4974 | 0.4975 | 0.4976 | 0.4977 | 0.4977 | 0.4978 | 0.4979 | 0.4979 | 0.4980 | 0.4981 |
| 2.9 | 0.4981 | 0.4982 | 0.4982 | 0.4983 | 0.4984 | 0.4984 | 0.4985 | 0.4985 | 0.4986 | 0.4986 |
| 3.0 | 0.4987 | 0.4987 | 0.4987 | 0.4988 | 0.4988 | 0.4989 | 0.4989 | 0.4989 | 0.4990 | 0.4990 |
| 3.1 | 0.4990 | 0.4991 | 0.4991 | 0.4991 | 0.4992 | 0.4992 | 0.4992 | 0.4992 | 0.4993 | 0.4993 |
| 3.2 | 0.4993 | 0.4993 | 0.4994 | 0.4994 | 0.4994 | 0.4994 | 0.4994 | 0.4995 | 0.4995 | 0.4995 |
| 3.3 | 0.4995 | 0.4995 | 0.4995 | 0.4996 | 0.4996 | 0.4996 | 0.4996 | 0.4996 | 0.4996 | 0.4997 |
| 3.4 | 0.4997 | 0.4997 | 0.4997 | 0.4997 | 0.4997 | 0.4997 | 0.4997 | 0.4997 | 0.4997 | 0.4998 |
| 3.5 | 0.4998 | 0.4998 | 0.4998 | 0.4998 | 0.4998 | 0.4998 | 0.4998 | 0.4998 | 0.4998 | 0.4998 |
| 3.6 | 0.4998 | 0.4998 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 |
| 3.7 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 |
| 3.8 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 | 0.4999 |
| 3.9 | 0.5000 | 0.5000 | 0.5000 | 0.5000 | 0.5000 | 0.5000 | 0.5000 | 0.5000 | 0.5000 | 0.5000 |